ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீச்வராய நம:

# ஆர்யதர்மம்.

பிராணிகளனைவரும் பல்கோடிகாலம் தான் ஜீவித்திருப்போமென்றும் பரலோக சிரேயஸ்ஸைத் தேடிக்கொள்ள பின்னிட்டு முயல்வோமென்றும் லௌகிக விஷயங்களில் ஈடுபட்டு காலத்தை வீணாகக் கழித்து வருகின்றனர். நாம் நினைத்தபடி நடப்பதில்லையென்பதை அவர்கள் தெரிந்துகொள்ளவில்லை. வாழ்நாள் முழுமையும் விஷயங்களையே தியானித்துக்கொண்டு விஷயாசையால் அங்குமிங்குமோடித்திரிந்து நொடிப்பொழுதேனும் பரமேச்வரனை நினைக்காமல் இருந்துவிட்டால் பிராணன் வெளிப்படும்பொழுது எப்படி நினைக்க நேரிடும்? தீர்க்காயுர்யோகமுள்ளவர்களும் தற்காலத்தில் நூறுவயதுக்குமேல் ஜீவிப்பதில்லை. அதில் பால்யத்திலும், முதிர்ந்த வயதிலும், இரவுகளிலுமாக வெகுகாலம் ஒன்றுக்கும் பயன்படாமல் போய்விடுகின்றது. ஸ்வஸ்தமாயிருக்கும் ஸமயமோ மிகக்குறைவு. அதிலும் விஷயபோகமே பெரிதாக இருந்துவிட்டால் பாரலௌகிக சிரேயஸ்ஸுக்கு ஸாதனமாயுள்ளதையனுஷ்டிப்பதெப்போ? அதனால் சரீரேந்திரியாதிகள் நன்றாயிருக்கும்பொழுதே நாள் தப்பாமல் ஸ்வல்பகாலமாவது அம்பிகாபதியிடம் அன்பு பாராட்டி சிவனடியார்களைச் சேவித்து உண்மையுணர்ந்து நீர்மேல் குமிழிபோன்ற விஷயங்களில் ஆசையையொழித்து சிரேயஸ்ஸையடைய ஸாதனத்தைத் தேடிக்கொள்ள வேண்டும். இங்கு ஸ்வல்பஸுகத்துக்காக ஆசைப்பட்டு பரமபாக்கியத்தையிழந்துவிடுவது புத்திமான்களுக்கழகில்லை. விஷயபோகத்திற்காக இந்த மானிடப் பிறவி வேண்டியதில்லை. திர்யக்ஜன்மங்களிலும் விஷயபோகமுண்டு. மானிடப் பிறவியிலும் அதையே பெரிதாக நினைத்தால் மாடு, ஆடுகளுக்கும், மனிதர்களுக்கும் என்ன பேதம்? அதனால் இந்த உண்மையை மனிதனாய்ப் பிறந்த ஒவ்வொருவனும் தீர்க்காலோசனை செய்துத் தெரிந்துகொண்டு நம்முன்னோர்கள் கூறியிருக்கிறபடி பால்யம் முதற்கொண்டே பகவான் ப்ரீதியடையும்படியான தர்மங்களைத் தவறாமல் நீண்டகாலம் ஆதரவுடன் இடைவிடாதனுஷ்டித்து பரமசிரேயஸ்ஸை அடைவோமாக. சுபம்.

ப—ர்.

# ஆர்யதர்மம்.

சுக்ல-௵ ஆனி-௴ உகவ

## பிரஹ்லாதசரித்திரம்.

(342-வது பக்கத்தொடர்ச்சி.)

### அஸுரபாலகர்களுக்கு உபதேசம்.

பிரஹ்லாதன் சுக்கிராசாரியாராலும் அவரது புத்திரர்களாலும் மற்றுமுள்ள உபாத்தியாயர்களாலும் எவ்வளவோ போதிப்பிக்கப்பட்டும், அவர்களெதிரில் அவர்களது இஷ்டம்போல்படித்துவிட்டதாக அபிநயித்து ஹிரண்யகசிபுவினிடம் செல்லும்பொழுது தனது பால்யாப்யாஸத்துக்குத் தக்கவாறே பகவத்பக்தியையே பெருமைப்படுத்திப் பேச, ஹிரண்யகசிபு கடுஞ் சினங்கொண்டு, கண்சிவக்க, உதடு துடிக்க, குருபுத்திரனை நோக்கி "ஓ பிராம்மணா! நீர் எனது சத்ருபக்ஷத்தை ஆச்ரயித்துக்கெட்டதுமன்றி மூன்று தடவையாய் நான் சொல்லிவருவதையும் லக்ஷியம் செய்யாமல் அஸாரமாகிய எதையோ சொல்லி நமது சிறுவர்களையும் கெடுத்துவிட்டீர்களே. உங்களுக்கு என்ன துர்புத்தி? உங்கள் பேரில் குற்றமில்லை. உலகத்தில் இம்மாதிரியான துஷ்டர்கள் ஸாது வேஷம் தரித்து உலகத்தைக் கெடுத்துவருகின்றனர். பாபம் செய்தவர்களுக்கு திடீரென்று ரோகம் உண்டாவதுபோல் இந்த துஷ்டர்களுக்கும் இவ்வாறு கெட்டெண்ணம் உண்டாகிவிடுகின்றது" என்று கூறவே, குருபுத்திரர் "ஓ அரசனே! கோபம்கொள்ளாதீர், வந்தகோபத்தையடக்கிக்கொள்ளும், தம்முடைய குழந்தை இப்படியெல்லாம் பேசுவது எங்களாலும் பிறராலும் கற்பிக்கப்பட்டதல்ல. ஆனால் அவன் பிறந்ததுமுதல் இயற்கையாயமைந்த குணமிது. அதனால் எங்கள்மீது அபவாதத்தைச்சுமத்தி கஷ்டப்படுத்தவேண்டாம்" என்று சொல்லவே, ஹிரண்யகசிபு, தனது பாலனை நோக்கி "அடா மூடா! இந்த புத்தி குருபதேசத்தால் கிடைக்காவிடில் எவ்விதமாகத் தோன்றிற்று" என்று கேழ்க்க,

அதற்கு பிரஹ்லாதன் 'அனேக கார்யத்தைச் செய்கிறேமென்று அபிமானம்கொண்டு செய்ததையே செய்துகொண்டு அக்ஞான இருளில் புகுந்து வீடுவாசலையே பெரிதாக நினைத்துக்கொண்டவருக்கு ஸ்ரீபகவானிடத்தில் புத்தி செல்லவேமாட்டாது. அவர்கள் தனது மேன்மையையும் தெரிந்துகொள்ளமாட்டார்கள். குருடன் வழிகாட்டி நடக்கும் குருடர்கள்போல் ஸம்ஸாரத்தில் சுற்றிச் சுற்றிவருவார்கள். இவர்களது தௌர்பாக்கியத்துக்காக பற்பல அனர்த்தங்களை அடையவேண்டியதாயிருப்பதால் இவர்களது புத்தி பகவானிடம் நாடாது. மஹாயோகிகளான எல்லாவற்றிலும் பற்றற்ற மகான்களை ஆசிரியிக்காதவரை நல்ல புத்தி வாராது. ஸாதுக்களுடைய புத்தி ஸ்வபாவமாகவே பரமனது மதத்தைப் பற்றிநிற்கும். அதற்கொருவர் சொல்லிக்கொடுப்பானேன்" என்று கூறிய பிரஹ்லாதனைக்கோபங்கொண்டு தனது மடியிலிருந்து கீழே தள்ளிவிட்டு கலங்கின கண்ணுடன் ஓங்கின கோபத்துடன் "ஏ அஸுரர்களே! இவனை இங்கு வைக்காதீர்கள், வெளியில் விட்டுங்கள், வதை செய்யுங்கள், இந்தப்பாபிதான் எனது ஸஹோதரனுடைய நாசத்திற்குக்காரணமாயிருந்தவன். தன்னினத்தாரின் குணங்களைக்கொள்ளாமல் சிற்றப்பனைக்கொன்ற விஷ்ணுவின் பாதத்தை பலமாகப்பிடித்திருக்கிறான். பிதாவினிடத்திலேயே ஸ்நேஹப்பற்றற்ற இவனா விஷ்ணுவுக்குப் பிரீதியைச் செய்யப்போகிறான். ஐந்துவயதிலேயே இப்படி ஆரம்பித்தானே! இனி என்னென்ன செய்யமாட்டான். அன்னியனாயினும் ஔஷதம்போல் ஹிதத்தைச்செய்வானாகில் புத்திரனாவான். தன்னுடலினின்றுண்டான புத்திரனாயினும் அனுகூலனாயில்லாவிடில் உடம்பில் பற்றிய பிணிபோல் விபரீதமாவான். அதனால் கெட்டுப்போன அங்கத்தை வெட்டியெறிவதுபோல் துஷ்டனான புத்திரனைப் பல உபாயங்களாலும் நாசம்செய்துவிடவேண்டும். கெட்டபாகத்தைக் கழித்துவிட்டால் மற்ற பாகம் ஸரியாயிருப்பதுபோல இவனைக் கொன்றுவிட்டால் மற்ற நமதுஜனங்கள் ஸுகமாக ஜீவிப்பார்கள். ஆகையாலிந்த துஷ்டனை எப்படியாவது கொன்றுவிடுங்கள்" என்று கட்டளையிட்டான்.

அந்த அஸுரர்களும் சூலத்தையெடுத்துக்கொண்டு செம்பட்டைமயிரும், தெத்துப்பல்லும், சிவந்தவிழியுமாகக் கோர உருவங்கரித்து, வெட்டு, குத்து, அடி, பிடி என்று கடுமையாகச்சத்த

மிட்டுக்கொண்டு ப்ரஹ்லாதன்பக்கம் வந்து சூலத்தால் மர்மஸ்தானங்களில் குத்தினார்கள், கத்தியால்வெட்டினார்கள், எவ்வளவுசெய்தும் அவையெல்லாம் பாக்கியமில்லாதவன் செய்த கிரியைகள் போல் ஸர்வாத்துமாவாகிய பரமாத்துமாவிடம் ஒருமைப்பட்ட மனதையுடைய ப்ரஹ்லாதனிடம் வீணாயின. அவ்வளவு பிரயாஸப்பட்டுச் செய்தனவெல்லாம் வீணாகவே, ஹிரண்யகசிபு சங்கை அடைந்து எப்படியாவது இவனைக்கொல்லாமல் விடக்கூடாது என்று யானையின் காலாலிடறச்செய்தும், பாம்புகளைக் கடிக்கவிட்டும், மலையினின்று தள்ளிவிட்டும், ஆபிசாரஹோமம் செய்வித்தும், கயிற்றால் கட்டியுருட்டியும், போஜனத்தைக் கொடுக்காமலே பட்டினிபோட்டும், அன்னத்தில் விஷத்தைக் கலந்துகொடுத்தும், நெருப்பில் தள்ளியும், தண்ணீரில் அமிழ்த்தியும், எவ்வளவோ காரியம்செய்தும் அவனைக் கொல்லமுடியவில்லை. மிகக் கவலை அடைந்தான். அந்த ஸமயத்தில் குருபுத்திரர் ஹிரண்யகசிபுவை 'கவலைப்படவேண்டாம், இன்னுமொரு தடவை எங்கள் வசமாய் விட்டுவிடுங்கள், நாங்கள் மறுபடி போதிக்கிறோம்' என்று ஸமாதானப்படுத்தி ப்ரஹ்லாதனைத் தனதுகிரஹத்திற்கு அழைத்துப்போய் தர்ம்மாதிகளை போதித்தார்கள், என்ன போதனைசெய்தும் அது பயன்படவில்லை. ஒருஸமயம் ஆசாரியார் வீட்டுவேலையைக் கெவனித்திருக்கும்பொழுது ப்ரஹ்லாதன் பந்து முதலிய விளையாட்டுஸாமான்களை யெடுத்துக்கொண்டு தன்னையும் விளையாடக் கூப்பிடும் அஸுரபாலகர்களை நோக்கி "பாலகர்களே! விளையாடி வீணாகக் காலத்தைக் கழிக்கப் புறப்படுகிறீர்களே! மனிதனாய்ப் பிறந்தவன் செய்யவேண்டிய வேலை இதுவா? இல்லை, ஆனால் பால்யம்முதற்கொண்டே பகவான் ஸந்தோஷப்பட்டு அனுக்கிரஹம் செய்வதற்கு ஹேதுவான தர்மங்களையாசரிக்கவேண்டும். இந்த மானிடப்பிறவியோ கிடைப்பதற்கரிது. அதிலும் புருஷார்த்தங்களையடையும்படியான பாக்கியம்பெற்ற சரீரத்தையடைவது மிகவரிது. அத்தகைய மனுஷ்யசரீரத்தையடைந்தவன் பகவானுடைய பாதாரவிந்தத்தையாசிரயிக்கவேண்டும். பிராணிகளுக்கு விஷயஸம்பந்தத்தாலேற்படும் சிற்றின்பங்கள் எங்கும் ஸுலபமாய் கிடைக்கும். நாம் வேண்டாமென்றாலும் விலகாது. நாம் வேண்டாமென்று வெறுத்தாலும் துக்கம் தானாகவேவந்துவிடுவது போல விஷயஸுகமும் தானாகவேநேர்ந்துவிடும். அதற்காகப்பாடு

படவேண்டாம். அப்படியானால் ஆயுள் அழியுமேயன்றிவேறொன்றும் கிடைக்காது. ஸ்ரீபகவானதுபாதத்தைநாடிப்பஜனைசெய்தால் க்ஷேமத்தையடையலாம். அதனால் ஸம்ஸாரபயமத்தியில் அகப்பட்டவன் மானிடப்பிறவியில் புருஷனாகப்பிறந்து காலத்தைக் கழிக்காமல் பகவானைச் சரணமடைந்து க்ஷேமத்தையடைய முயற்சிக்கவேண்டும். கிடைத்தபுருஷசரீரம் ஸ்வஸ்தமாயிருப்பதற்குள்பிரயத்தனம் செய்யவேண்டும். புருஷர்களுக்கு நூறுவருஷம் ஜீவிதகாலமாக ஏற்பட்டுள்ளது. அதில் இரவில் ஸரிபாதி போய்விடுகின்றது. பால்யத்தில் ஒன்றுந்தெரியாமல் விளையாடி இருபதுவருஷம் கழிந்துவிடுகிறது கிழவனாய்ப்போய் இருபதுவருஷம் கஷ்டப்படும்படியாய்விடுகின்றது. எவ்விதத்தாலும் நிரப்பமுடியாத கர்மாதிகளால் பாக்கிகாலம் தொலைந்துபோகிறது. குடும்பத்திலீடுபட்டு ஸ்னேஹபாசத்தால் கட்டுண்டவன் அதினின்று தன்னை விடுவித்துக்கொள்ள எவன் சக்தியுள்ளவனாவான்? பிராணனைப்பெரியதாக நினைத்த பணத்தின்மீதுள்ள ஆசையையொழிக்க எவனால் முடியும்? பிராணனைவிடப் பணம் பெரிதென்பது பிராணனைக் கொடுத்தாவது பணத்தைத் தேடப்புகுந்த திருடன், ஸேவகன், வியாபாரி இவர்களைக் கேட்டால் தெரியும்.

(இன்னும் வரும்.)

ப—ர்.

---

# பரோபகாரம் பெரியதர்மம்.

(346-வது பக்கத்தொடர்ச்சி.)

பரமேச்வரன் ஜபாராமனுக்கு அபயமளித்து மூன்றுவரன் கேட்டுக்கொள்ளும்படி ஆக்ஞாபிக்க, ஜபாராமன் முதலாவதுவரனுக்காக கட்டிமாமரத்தின் கதியைக்கேட்டான். அதற்குப்பரமேச்வரன்—“ இந்தக்கட்டிமாமரமாய் ஜனித்தஜீவன், பூர்வஜன்மத்தில் ஸகலசாஸ்திர பாரங்கதனாகவும், போதனைசக்தியுடையவனாயிருந்தும் பிறருக்கு ஒரு அக்ஷரம்கூட சொல்லிவைக்காததோஷத்தால் இப்பிறவியில் இந்தஸ்தாவரஜன்மத்தை யடைந்து பரோபகாரமாகும்படியாயிருந்தும் கிஞ்சிற்றேனும் உபகாரப்படாததாயிற்று, ஆனால் பூர்வஜன்மஸுக்ருதத்தால் இந்தஸ்தாவரத்தன்மையிலும்

அறியவும் பேசவும் சக்தியுடையதாயிற்று. அதனாற்றான் உன்னைக் கண்டுத்தனதுபாபகதியை விசாரித்துவருப்படி உன்னிடம்பிரார்த்தித்துக்கொண்டது. தனதுவித்யைகளை இந்த அவஸ்தையிலாவது அன்னியருக்கு உபதேசித்துவிட்டால் இந்தஜன்மம்விலகி நல்ல ஜன்மம்கிடைக்கும்" என்றார். கட்டிமாமரத்தின் கதியைக்கேட்டபின் ஜயராமன் இந்தமலைப்பாம்பின்கதியைக்கேழ்க்க "ஜன்மாந்தரத்தில் இவன்பெரியபணக்காரனாயிருந்துஒருகாசுகூட பிறருக்குக்கொடுக்கவில்லை. அந்ததோஷத்தால் இந்தப்பிறவிகிடைத்தது, இப்போதாவது புதைத்துவைத்தபணத்தை ஒருவனுக்குதானம் செய்துவிட்டானேயாகில் இந்தஜன்மம்துலைந்து நல்லபிறவி யடையலாம்." என்று பரமேச்வரன் கூறியதைக்கேட்டுவிட்டு தனக்கு உபதேசித்தவேடன் துர்மரணத்தை யடைந்ததைப்பற்றி ஜயராமன்கேட்டான். அப்பொழுது பரமேச்வரன் இந்தவேடன்விஷயத்தையும் நாமேசொல்லிவிட்டால், மூன்றுவரங்களும் ஆய்விடுகின்றன. அப்போது ஜயராமன் தன்னைப்பற்றி ஒன்றும்கேட்டுகொள்வதாக ஏற்படவில்லை. தர்மத்தைக்கேழ்க்கவல்லவா இவன் புறப்பட்டான். தன்விஷயத்தில்மோசம்போகிறான் இவன், என்றகருணையால் தானேநேரிடச்சொல்லாமல் காசிதேசத்தரசனின் குழந்தை மூலமாய் வேடனுடையகதியையும், ஜயராமனுடைய ஸொந்த விஷயத்தையும் தெரிவிக்கச்செய்து விடுவோமென்றெண்ணி "ஹே ஜயராமா! காசிதேசத்து மகாராஜாவின் பட்டமஹிஷி பூர்ணகர்ப்பிணியாயிருந்தவள் பலவைத்யர்கள் வந்துபிரயத்தினம் செய்தும், பிரஸவிக்கமுடியாமல் பத்துநாளாய் சிரமப்பட்டுக்கொண்டிருக்கிறாள். அதற்காக காசிதேசத்தரசன் யாரேனும்குழந்தையை வெளிப்படுத்துவராகில் பாதிராஜ்யம் கொடுப்பதாகப் பறையறைந்து பரிதபித்துக்கொண்டிருக்கிறான். நீ போய் நான்வெளிப்படுத்துகிறேனென்றுசொல்லி பிரஸவஅறையைச் சென்றவுடன் குழந்தைதானாகவே வெளிப்பட்டுவிடும். அந்தக்குழந்தையை நீ கேட்கிறபக்ஷத்தில் அந்தக்குழந்தை எல்லாவற்றையும்சொல்லும்." என்று சொல்லிவிட்டு பரமேச்வரன் அந்தர்த்தான மடைந்தார். ஜயராமனும் காசிக்குச்சென்று தான்குழந்தையைவெளிப்படுத்துவதாகவும், என்னைத்தவிற வேறொருவரும் இருக்கக்கூடாது என்று சொல்லி அப்படியே ஆகட்டுமென்று மகாராஜா அனுமதிக்க பிரஸவகிரகம் சென்றவுடன் குழந்தை வெளிப்பட்டு விட்டது.

ஜயராமன் மிகவும்ஸந்தோஷத்துடன் அக்குழந்தையைநோக்கி அந்தவேடனுடைய கதியைக்கேழ்க்க அதற்கு அக்குழந்தையும்— "நான்தான் அந்தவேடன் தங்களுக்கு தினைமாவும், தேனும்கொடுத்தமஹாபுண்ணியத்தால் இத்தகையபெரியபதவியை நான் உடனே அடையநேரிட்டது. தினைமாவும் தேனும் கொடுத்ததற்கு இவ்வளவானல் தாங்கள்ஸம்பாதித்த பணம்முழுமையும் தங்கள் தாயார் முதலியவர்களால் அதிதிகள் விஷயத்தில் செலவிடப்பட்டிருப்பதற்கு எவ்வளவுகிடைக்கவேண்டாம். தங்கள்தாயார்ஒன்றுக்கனேகமாய் பயனையளிக்குமென்று கூறியதுண்மையே. இதைக்கேழ்க்கவேண்டுமென்று புறப்பட்டதாங்கள் இதைக்கேழக்காமல் பரமேச்வரன் கொடுத்தமூன்றுவாரங்களுக்காக கட்டிமாமரம் மலைப்பாம்புகளின் கதியைக்கேட்டுவிட்டு என்னைப்பற்றிகேட்டதோடு நிறுத்திவிட்டபடியால், என்னைக்கொண்டே என்விஷயத்தையும் தங்களுடையவிஷயத்தையும் தெரிவிக்கும்படி பரமேச்வரன் ஸங்கல்பித்து அனுக்கிரஹித்தபடியால் சிசுவாயினும் இதைச்சொல்ல சக்தியடைந்தேன். தினையையும் தேனையும் தங்களுக்கு தானம் செய்தபுண்ணியவசத்தால்வேடஜன்மம்நீங்கி சக்கிரவர்த்திவயிற்றில் பிறந்தேன். இதுபோல் தங்களுடைய பணம் தர்மகாரியத்தில் விநியோகப்பட்டதின் பயனாக இப்பொழுது மகாராஜாவினால் என்னை வெளிப்படுத்தியதற்காகக்கொடுப்பதாய் ப்ரதிக்ஞை செய்யப்பட்ட பாதிராஜ்பத்தை வாங்கிக்கொண்டு மலைப்பாம்பையும், மாமரத்தையும் பார்த்துவிட்டுப்போகும்பொழுது கிடைப்பதையும் பெற்றுக்கொண்டு இஹத்தில் நல்லகீர்த்தியுடன் பரத்திலும் பரமசிரேயஸ்ஸை யடைவீர்கள்" என்று சொல்லிவிட்டு சிசு அழத்தொடங்கிற்று. அதைக்கேட்ட அரசன் ஓடிவந்து பரமஸந்தோஷத்துடன் ஆனந்தஸாகரத்தில் மூழ்கி ஜயராமனுக்கு பிரதிக்ஞைசெய்தபாதிராஜ்யத்தைக் கொடுத்தனுப்பி புத்திரஜன்மோத்ஸவத்துக்காக பூதான கோதான ஸ்வர்ணதான அன்னதானாதிகளைச்செய்து ஆனந்தமடைந்தான். ஜயராமனும் பாதிராஜ்யத்தைப் பெற்றுக்கொண்டு வேடனது பெண்டு பிள்ளைகளுக்குப் பெரியதோர் உதவிசெய்துவிட்டு மலைப்பாம்பினிடம்வந்து அதன்கதி சொல்லும்பொழுது, இந்தக்ஷணமே அவ்வளவுதனத்தையும் தங்களுக்குதானம்செய்துவிட்டேன்என்று பணமிருந்தவிடத்தைக் காட்டியதுடன் மலைப்பாம்புஅச்சரீரத்தைவிட்டு தற்காலம் அங்குவந்த திவ்யவிமானத்தின்மேலேறி தேவலோகம்சென்றது. உடனே ஜயராமனும் அவ்வ

ளவுதனங்களையும் பெற்றுக்கொண்டு, பரமாத்தின் ஸமீபம்வந்து அதன்கதியைத்தெரிவிக்க இந்தஸமயத்திலேயே ஸகலவித்யைகளையும் தங்களுக்கு உபதேசித்துவிடுகிறேனென்று உபதேசிக்க மாமரத்துக்கு அந்தஜன்மம்மாறி சிறந்த கந்தர்வபதவிகிடைத்தது. ஜயராமனும் பாதிராஜ்யத்தையும் பாம்பின்ஸொத்துக்களையும் பூர்ணமாக அடைந்து ஸகல வித்யாபாரகனாகி தனது ஜயபுரம் என்னும் ஸொந்தகிராமம் சேர்ந்து, இவ்வளவுபாக்யம் கிடைக்கும்படிசெய்த தாயாரைஸாஷ்டாங்கமாக நமஸ்கரித்து குடும்பத்தாரோடு ஸ்வதர்மத்தை யனுஷ்டித்துக்கொண்டு ஸுகமாக இருந்தான். இதனால் பரோபகாரம் பெரியதர்மமென்று ஏற்பட்டது. இதையே எல்லோரும் கைப்பற்றி மேன்மேலும் சிரேயஸ்ஸை யடைவார்களாக. சுபம்!

ப—ர்.

---

# சென்னை ஆஸ்திகப் பிரசாரம்.

## வைதிகமதத்தைப்பற்றி உபன்னியாஸம்.

(2—6—1929.)

(352-வது பக்கத்தொடர்ச்சி.)

அத்தகைய ஸ்வாபாவிக கார்யங்கள் கெட்டகார்யங்களை விலக்கி நற்காரியங்களை அநுஷ்டிக்கவேண்டும் என்றுதான் மதங்கள் உரைக்கின்றன என்றும், நற்காரியங்களுக்கு ஸ்வர்க்கம் முதலிய பலன்களில்லையென்று வைத்துக்கொண்டாலும் அக்காரியங்களைச் செய்தவுடன் உண்டாகும் சித்தசுத்தியும் ஆநந்தமும் அதன் மூலமாக யாவருக்கும்அநுபவஸித்தம் என்றும், யாகம் முதலிய பெரிய நற்காரியங்களைத் தற்போது செய்யமுடியாமல் போனாலும் செய்யத்தகுந்த நற்காரியங்களை சக்திக்குத்தகுந்தவாறுசெய்வதுதான் ஆஸ்திகர்களுக்கழகாகும் என்றும், கீதையில் ஸ்ரீ கண்ணபிரான் தம் தம் மதத்தைக் கைவிடாது அவரவர்களுக்குரிய கார்யங்களை யநுஷ்டிப்பவர்களுக்கு க்ஷேமமுண்டென்றும், மேற்படி காரியங்களை ஸரிவர அநுஷ்டிக்க முடியாத பக்ஷத்தில் அபிமானமாவது வைத்துக்கொண்டால் போதுமானதென்றும், அபிமானம் வைக்கவுமிஷ்டமில்லாத பக்ஷத்தில் நிந்திக்காமலிருந்

தால் க்ஷேமமடையலாமென்றும் கூறியுள்ளார் என்றும், ஆகவே இம்மூன்றுபடிகளுக்குள் எந்தப்படியிலாவது நாமிருந்துகொண்டால் க்ஷேமமடைவது சுலபமென்றும் சொன்னார்.

மேலும் பேசியதாவது:— அன்றியும் ஹிந்து மதஹீன ஸ்திதிக்கு ஹிந்துமதக்ரந்தங்களைப் பரிசிலனம் பண்ணாமல் அனேக வருஷகாலமாக விட்டுவிட்டதே முதற்காரணமாகும். வைதிக மதமனைத்தும் வேதம் முதலிய ஸம்ஸ்கிருதபாஷை நூல்களால்தான் வெளியிடப்பட்டிருக்கின்றது. ஸம்ஸ்கிருதபாஷையை நாம் அறிந்தாலன்றி நமது மததத்துவம் புலப்படாது. அநேக ஆண்டுகளாக ஸம்ஸ்கிருத வித்யாப்பியாஸம் நமது நாட்டில் அழிந்து விட்டதல்லவா? தற்காலத்திய கல்விமுறைகள் எல்லாம் மனிதனை மதத்தில் குருடனாகச் செய்துவிடுகின்றன. மூளையில் அனேக ஸமாசாரங்களைச் சுமத்தி வைத்துக்கொள்வது படிப்பாகுமா? எதனால் நம்மையும் நமது வாழ்நாளையும் நமது சுற்றத்தாரையும், நமது தேசத்தையும், உயர்த்திவிடக்கூடுமோ அதுதான் படிப்பாகும். ஆகையால் மலைகளிலும், புஸ்தகசாலைகளிலும், முன்னோர்களது ஹிருதயகமலத்திலும், விளங்கிவந்த ஸம்ஸ்கிருதக் கிரந்தங்களனைத்தும், நம்மவர்கள் கற்றுணரவேண்டும். ஸம்ஸ்கிருத பாஷைக்கே நாஸ்திகர்களை ஆஸ்திகர்களாகச் செய்யும் சுபாவமுண்டு. இவ்விந்தியாவில் மதவிருத்தமான எவ்வித உபன்யாஸங்களும் பயன்படா. ஜனங்களுக்குக் கிளர்ச்சியையும் துவேஷத்தையும் தான் விருத்திசெய்துவிடும். மேநாடுகளில் ராஜ்யதந்திரம் ப்ரதானமாயிருப்பதுபோல் நமது நாட்டில் மதம்தான் ப்ரதானமாகும் என்று விரிவாய்க் கூறிமுடித்தார்.

வி. ஜகதீசுவர சாஸ்திரிகள்.

---

## ஸ்ரீ ஜகத்குரு வித்தியாஸ்தானத்தில் வைத்தியபாடாரம்பம்.

ஸ்ரீகாஞ்சிகாமகோடிபீடாதிபதிகளான ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகளவர்களுடைய பரமானுக்ரஹத்தால் ஸ்ரீ ஜம்புகேசுவர க்ஷேத்திரத்தில் ஸ்ரீமடத்தில் ஸ்ரீ ஜகத்குரு வித்யா

ஸ்தானமென்று நாமம்பூண்டதோர் வித்யாசாலை, ஷை க்ஷேத்திரத்தில் ஸ்ரீ அகிலாண்டேசுவரீ அம்பாளின் தாடங்கப் பிரதிஷ்டா மஹோத்ஸவம் நடத்தினதின்பிறகு ஆரம்பிக்கப்பட்டு நடந்து வருவதில் ஆர்யபாலகர்களுக்கு நியமாத்தியயனமும், அத்வைதவேதாந்தபாடமும் நடந்து வருவது யாவருமறிந்தவிஷயமே. ஸகல வைதிக கர்மங்களுக்கும் முக்கிய அங்கமான சுத்ததிதி முதலியகாலங்களை அறிவிக்கும் வேதாங்கத்திற்குள் பிரதானமான ஜ்யோதிஷ சாஸ்திரத்தின் பிரசாரம் தற்காலம் குறைவாயிருப்பதால் அதைப் படிப்பித்தல் முதலிய உபாயங்களால் விருத்திக்குக்கொண்டுவர வேண்டுமென்ற கருணையால் ஸ்ரீபரமாசாரியாளவர்களால் ஆக்ஞாபிக்கப்பட்டப் பிரகாரம், கோமல் வெங்கடேசுவரதீக்ஷிதரவர்கள், சுந்தரேசுவரசிரௌதிகளவாள் இவர்களுடையசிஷ்யர்களுள்ஒருவரும், பாஷ்யபாவக்ஞ-ஸ்மிருதிபூஷணபிருதுள்ளவருமான வரகூர் ஸ்வா. வெங்கட்டராமசாஸ்திரிகளவர்களை உபாத்தியாயராக நியமித்து திரிஸ்கந்த பாடங்களும், பிரபவ-ஞு ஆனிமீ முதற்கொண்டு நடத்தப்பட்டு வருகின்றன. வித்தியார்த்திகளுக்கு போஜனாதி சௌகரியங்கள் ஸ்ரீமடத்திலேயே செய்யப்படுகின்றன. உசிதகாலத்தில் சிரேயஸ்ஸாதனங்களை அனுஷ்டிப்பதற்கு ரோகமில்லாத திடசரீரமே முதன்மையான ஸாதனம். அதற்கு ரோகங்கள் இடையூறாய் நிற்கின்றன. புத்திவலிமையற்ற தற்காலத்தியவர்கட்கு பற்பல ரோகங்களெளிதில் ஸம்பவிக்கின்றன. அவைகளை நீக்குவதற்காகவும், ஸ்வஸ்தனுக்கு அத்தன்மையை நிலைக்கச் செய்வதற்காகவும், அதர்வண வேதத்தின் உபவேதமாகிய ஆயுர்வேதம் அனாதியாய் விளங்கிவருகின்றது. அதுவும் காலதோஷத்தால் சாஸ்திரீயமுறையில் பிரசாரத்தை அடையாமலிருப்பதை நினைத்து அதை சரியான சாஸ்திரீயமுறைப்படி அபிவிருத்தி செய்ய, ஸ்ரீ ஜகத்குருவித்யாஸ்தானத்தில் ஆயுர்வேதாப்பியாஸமும் நடத்தவேணுமென்ற ஸ்ரீ மஹாஸன்னிதானத்தின் அனுக்கிரஹ பூர்வகமான ஆக்ஞையைமுன்னிட்டு நாளது சுக்ல வருஷம் ஆனிமீ 15உ முதல் ஆயுர்வேத பாடமும் ஆரம்பித்து நடத்தப்பட்டுவருகிறது. உபாத்தியாய பதவியில் கொச்சி ஸமஸ்தானம், கொடுங்கல்லூர் பிரும்மஸ்ரீ வெங்கடேசுவர அய்யாவர்கள் ஸ்ரீமஹாஸன்னிதான ஆக்ஞைப்படி வரவழைக்கப்பட்டிருக்கிறார்கள். ஷை வெங்கடேசுவர அய்யாவர்கள், கொடுங்கல்

ஊர் கோலகம் ராமவர்மாராஜா அவர்களிடத்திலும், ஸ்ரீ பரசுராம முனிவரால் தனது க்ஷேத்திரமாகிய கோளதேசத்தில் ஸ்தாபிக்கப்பட்ட எட்டு வைத்தியர்களுள் ஒருவராகிய குட்டஞ்சேரி ஆர்யமூஸ் அவர்களிடத்திலும், சரகம், ஸுச்ருதம், அஷ்டாங்க ஹ்ருதயம், முதலிய ஆயுர்வேதக் கிரந்தங்களை 12-வருஷகாலம் ஸாங்கோபாங்கமாகப் படித்தும் வமனவிரேகாதிசோதன கர்மங்களை நேரில்பார்த்துத் தெரிந்துகொண்டும் ஆயுர்வேதத்தில் ஒப்பற்ற பாண்டித்தியத்தை அடைந்தவர்கள். ரோகிகளைப் பரீசிலனை செய்து ரோகங்களை நிச்சயிப்பதிலும், அதற்குள்ள சிகித்ஸையை சோதனபூர்வகமாகச்செய்து ரோகத்தைசமிப்பித்து ஸ்வாஸ்தியத்தை உண்டுபண்ணுவதிலும் சிறந்ததோர் ஸாமர்த்தியம் பெற்றவர். திருவாங்கூர் ஸமஸ்தானத்தைச் சேர்ந்த பரூரென்னுமூரில் நாட்டு வைத்தியசாலையில் சில வருஷங்கள் ஆயுர்வேத டாக்டராயிருந்தவர். பிரும்ம வித்தியாபத்திராதிபர்களான பிரும்மஸ்ரீ ஸ்ரீநிவாஸசாஸ்திரிகள் அவர்கள் இவர்களிடம்சிகித்ஸைசெய்துகொள்ள பரூர்சென்று சிகித்ஸை செய்துகொண்டு ரோக நிவர்த்தியடைந்து ஸ்வஸ்தமான ஸந்தோஷத்தால் கொடுத்த யோக்யதாபத்திரத்தில்,

रोगिपरिशीलने तव वैदग्धीं वीक्ष्य तुष्यामि ।

‘ரோகிகளைப் பரிசீலனம் செய்வதில் தமக்குள்ள ஸாமர்த்தியத்தைக் கண்டு ஸந்தோஷிக்கிறேன்’’ என்றும்,

अष्टाङ्गहृदयहृद्यं दृष्ट्वाङ्ग भवन्तमार्यचरिताढ्यम् ।
नष्टा रुजा दुरुद्धरकष्टा शिष्टाशिषा चिरं जीव ॥

“அப்பாவர்காள்! அஷ்டாங்க ஹிருதயத்தை ஹிருதயத்தினுள்ளடக்கி மேன்மையான நன்னடத்தை நிறைந்த தங்களைப்பார்த்தும் மீளாக் கஷ்டத்தை விளைவித்த எனது கொடியநோய்நசித்துவிட்டது. சிஷ்டர்களது ஆசீர்வாதத்தால் நீடூழி வாழக்கடவீர்” என்றும் இவர்களைப் புகழ்ந்திருக்கிறார்கள். ஜோதிஷ சாஸ்திரத்தில் அபரஸூரியனேவென்று நினைக்கும்படி பிரஸித்திபெற்று விளங்கிவந்த பிரும்மஸ்ரீ சுந்தரேசுவர சிரௌதிகள் அவர்கள் ஷெ. அய்யாவர்களிடம் சிகித்ஸை செய்துகொண்டு ஸ்வஸ்தமானதும்

आत्रिंशदब्दमनुभूतचरो मदीय-
कुक्ष्यामयो बहुभिषग्वरदुश्चिकित्स्यः ।
उन्मूलितः कतिपयैर्दिवसैरनेन
किंवाद्भुतं तत इतोऽपि मनुष्यलोके ॥

"முப்பது வருஷகாலமாக பெரிய வைத்தியர்களாலும் சிகித்ஸை செய்யமுடியாமல் நான் அனுபவித்து வந்த வயிற்று வலியை சிலநாள்களுக்குள்ளாகவே இவர் அடியோடு விலக்கினரே—, இதைவிட இவ்வுலகிலென்ன ஆச்சர்யமிருக்கிறது" என்று யோக்யதா பத்திரம் கொடுத்திருக்கிறார்கள். நம் தமிழ் நாட்டிலும் காட்டுப்புத்தூர் மிட்டாதார், பங்களூர், மெய்கண்டதேவ முதலியார் முதலியவர்களுக்கு கொடிய நோய்களுக்குச் சிகித்ஸை செய்து ஸ்வஸ்தப்படுத்தி பிரஸித்தி அடைந்திருக்கிறார்கள். அவர்கள் தற்காலம் ஸ்ரீஜம்புகேசுவர க்ஷேத்திரத்தில் ஸ்ரீஜகத்குரு வித்தியாஸ்தானத்தில் ஸ்ரீ மஹாஸன்னிதான ஆக்ஞையின்பேரில் அத்யாபக பதவியை வஹிக்கின்றார்கள். வித்யார்த்திகள் ஜாதகையோடு வருபவர்களுக்கு 15 ரூபாய் காலக்ஷேபத்திற்காகக் கொடுக்கப்படுகின்றது. ஜாதகையோடு வர ஸௌகரியமில்லாதவர்களுக்கு ஸ்ரீ மடத்தில் போஜனாதி ஸௌகரியம்செய்து கொடுக்கப்படுகின்றது. இன்னும் இரண்டு வித்யார்த்திகள் சேரலாம். ஆனி மாதத்திற்குள் வரவேண்டும். ஜ்யோதிஷ வகுப்பிலும் இரண்டு பேர் சேரலாம். ஸ்ரீ பரமாசாரியாள் அனுக்ரஹத்தால் ஜகத்குரு வித்யாஸ்தானத்தில் இதுபோலவே ஸகல கலைகளும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டுமென்று ஸ்ரீ மஹாஸன்னிதானம் பொற்பாத கமலங்களை அல்லும் பகலும் போற்றுகின்றோம்.

சுந்தரேசன்.

---

## ஸ்ரீதேவி வஸிக்குமிடங்கள்.

விஷ்ணு ஸம்ஹிதையில்.

वसाम्यथार्के च निशाकरे च तारागणाढ्ये गगनेऽपि मेघे ।
मेघे तथा लम्बपयोधरे च शक्रायुधाढ्ये च तडित्प्रकाशे ॥

" உலகத்தில்காணப்படும் சுத்தமானதும், ரமணீயமானதுமான, ஸகலவஸ்துக்களிலும் இலக்ஷ்மீவஸிக்கிருள்," என்பது திண்ணம். அவைகளில் பிரஸித்தமான, சூர்யபிம்பம், சந்திரபிம்பம், நக்ஷத்திரம்நிறைந்த ஆகாயம், வானவில் மின்னல் உள்ள நீருண்ட மேகம், யானை, குதிரை, ஸுவர்ணம், வெள்ளி, ரத்தினங்கள், கண்ணாடி முதலியவைகளில் வஸிப்பதை எல்லோரும் ஆக்ஷேபிக்காமல் ஒப்புக்கொள்வார்கள். அவைகளுடன் சேர்த்து மற்றவைகள் சொல்லியிருப்பதால், அவைகளைக்கேட்டபிறகே மற்றவைகளிலும் விச்வாசம் ஏற்படக்கூடியதாயிருக்கிறது. தலையில் குறிப்பிட்ட விஷ்ணுஸம்ஹிதையில் 66-வது அத்யாயத்தில் 14 சுலோகங்களினால் ஸ்ரீ தேவிவஸிக்கும் இடங்கள் 84 குறிப்பிடப்பட்டிருக்கின்றன. அவைகளில் சிலவற்றைமாத்திரம் தெரிவித்துக்கொள்கிறேன்.

तपस्विनां यज्ञहुतां च देहे वेदध्वनौ वाप्यथ शंखशब्दे ।
स्वाहास्वधाशापथवाक्यशब्दे यज्ञे वरे स्नाताशिरस्यथापि ॥
साधौ नरे धर्मपरायणे च आचारसेविन्यथ शास्त्रनित्ये ।
विनीतवेषे च तथा सुवेषे मृष्टाशने चातिथिपूजने च ॥
स्वदारतुष्टे निरते च धर्मे धर्मोत्कटे चात्यशनाद्विमुक्ते ।
सत्यस्थिते भूतहिते निविष्टे ॥

புருஷர்கள் பரமாய், மேற்கண்டபடி, தபஸ்செய்கிறவர்கள் என்பதால், வேதாத்யயனம் செய்பவர்களாயும், பிர்ம்ம விசாரம் செய்பவர்களாயும், தன் அதிகாரத்துக்குத்தக்கபடி ஹோமங்கள், யாகங்கள், செய்பவர்களாயும் இருக்கவேண்டும் என்றும், காதுக்கினிமையாயுள்ள வேதத்துவனி, சங்கசப்தம், ஸ்வாஹாசப்தம், ஸ்வதாசப்தம், **अथ** என்னும்சப்தம் என்றதால், ஒவ்வொரு வீடுகளிலும், ஔபாஸந, அக்னிஹோத்ர, வைச்வதேவங்களும், உத்தமசாஸ்திரவிசாரங்களும் நடந்துகொண்டே இருக்கவேண்டுமென்பது விளங்குகிறது. யாகத்தில் அவபிருதஸ்நாநம்செய்தவரிடத்திலும், ஸாதுவாயும் தர்மத்தையே முக்கியமென்றுஎண்ணுபவரிடத்திலும், தமக்குஏற்பட்ட ஆசாரத்தை எக்காலத்தும் எவ்விதப்பயனையும் கருதாது ஸேவிப்பவரிடத்திலும், எப்பொழுதும் ஸ்வபாவமாகவே சாந்தஸ்வபாவமும், நல்ல ஆடை ஆபரணங்

கள் அணிந்தவரிடத்தும், அறுசுவையோடும், அதிதிகளைப் பூஜிப்பவரிடத்தும், தன் இல்லாளிடம் போதுமான ஸந்தோஷமடைபவரிடத்தும், தர்மத்தினிடம் பிரியம்செலுத்தி அதையே அதிகமாகச்செய்வோரிடத்தும், மீதூண்விரும்பாதாரிடமும், உண்மைபேசுபவரிடமும், பிராணிகளிடம் ஸஹஜமான இரக்கமுள்ளவரிடத்திலும், மஹாலக்ஷ்மீ வஸிக்கிறாள். இதனால், விவேகமுள்ள புருஷன் இருக்கவேண்டியதும், செய்யவேண்டியதும், கேட்கவும், பேசவும் வேண்டியதும் கூறி, ஸ்திரீகள்பரமாய் மேலும் கூறுகிறது.

नारीषु नित्यं सुविभूषितासु पतिव्रतासु प्रियवादिनीषु ।
अमुक्तहस्तासु सुतान्वितासु सुगुप्तभाण्डासु बलिप्रियासु ॥१॥
सन्दृष्टवेश्मासु जितेन्द्रियासु कलिव्यपेतासु पथिस्थितासु ।
धर्मव्यपेक्षासु दयान्वितासु स्थिता सदाहं मधुसूदने च ॥२॥

இதன்கருத்து—உத்தமஸ்திரீகளிடம் வஸிக்கிறதான்மதுஸூதனனிடம் வஸிக்கிறேன் என்ற தேவியின், அருமையான வாக்கால் ஸ்திரீ தர்மத்தில் அவச்யமானவை சொல்லப்பட்டது அதாவது, நித்யம் நாரீமணிகள் சுத்தமான வஸ்திரமுடுத்தி, முக்கியமான அணிகளணிந்து, அலங்காரத்தோடு பதிசுச்ரூஷை பிரிய வசனங்களோடு புரிந்தும், தன்குழந்தைகளைப் போஷிப்பதில் எப்பொழுதும் கவலையுள்ளவர்களாயும், அக்குழவிகளுக்கு எச்சமயத்திலும் இல்லையென்காமல் உணவளித்தும் (இதுவிஷயத்தில் என்தாயைக் குறிப்பிடாமலிருக்கமுடியவில்லை)வீட்டுப்பண்டங்களைசேகரித்தும் அவைகளை ஜாக்கிரதையாய் காலந்தோறும் கவனித்துக் காப்பாற்றிவருகிற ஸ்திரீகளிடமும், தேவதாராதனை, வைச்வதேவம் முதலான பலி கார்யங்களில் தொண்டு செய்தும், அன்புசெலுத்தியும், ஆஸ்தையுள்ளவளாயும், வீடுகளைக் கோமயத்தால் சுத்திசெய்தும், கோலங்களால் அலங்கரித்து, குப்பைமுதலிய அசுத்தங்களையகற்றி காப்பாற்றுவோரிடமும் ஐம்புலன்களையும் மனதையும் கெட்டவழியில் செலுத்தாமல், சாப்பிடக்கூடாததைச் சாப்பிடுதல், பார்க்கக்கூடாத நாடகம் முதலியதைப் பார்த்தல் முதலியவைகளை நீக்கி, !பதிசுச்ரூஷையை முக்கிய தர்மமாயெண்ணியும், பாபலேசமுமில்லாதவளாயும், ஸன்மார்க்கத்திலிருப்பவ

ளும் தர்மத்தையே செய்ய அபேக்ஷையுள்ளவளாயும், இதரர் படும் கஷ்டத்தை சகியாமல் தர்மமாய் உதவிபுரியும் ஸ்வபாவமுள்ள ஸ்திரீகளிடத்திலும் இளையவள் நித்யம் இடைவிடாது வஸிக்கிறாள். இவைகளினால், மனிதர்களாய் ஜனித்த ஸ்திரீ புருஷர்கள் தங்கள் தங்களிடம் ஸ்ரீதேவீ வஸிக்குமாறு இடங்கொடுப்பவர்களாக இருக்கவேண்டுமென்றும், அதற்காக ஒவ்வொருவரும் புதிதாகத் தேடவேண்டியதொன்றுமில்லையென்றும், நியாயமான தன் உரிமைகடைமையை செய்துவருவதே இலக்ஷ்மி வஸிக்கக் காரணமென்றும், எங்கு இலக்ஷ்மி வஸிக்கிறாளோ அங்கு நாராயணன் நித்யஸான்னித்யம் செய்கிறாரென்றும் நாம் தெரிந்துகொள்ளவேண்டியது அத்யாவச்யமாயிருக்கிறதென்று வணக்கத்துடன் வேண்டி இச்சிறு வியாஸத்தை முடிக்கிறேன்.

கிருஹ்யக்ஞ, வி. உமாமகேச்வரசாஸ்திரிகள்.
காட்டுமன்னார்கோவில்.

---

ஸ்ரீ:

ஸ்ரீசந்திரமௌளீச்வராய நம:

## ஸ்ரீ காஞ்சிகாமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரியஸ்வாமிகள் அவர்கள் ஸ்ரீமடம்

# ஸ்ரீ வியாஸபூஜா சாதுர்மாஸ்ய மஹோத்ஸவ பத்திரிகை.

ஸ்ரீ ஆதிசங்கரபகவத்பாதாசார்ய ஸ்வாமிகளின் ஸர்வக்ஞ பீடாரோஹண ஸ்தானமாயும், ஸாக்ஷாத் அதிஷ்டானஸ்தானமாயுமிருக்கிற, ஸ்ரீ காஞ்சி க்ஷேத்திரத்தின்கண் விளங்காநிற்கும் ஸ்ரீகாமகோடி பீடாதிபதி கும்பகோண நிவாஸிகளான ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்யஸ்வாமிகள் அவர்கள் சிஷ்யகோடிகளை அனுக்ரஹிக்கும்பொருட்டு விஜயயாத்திரையாகப் புறப்பட்டு காவேரீ தீரத்திலுள்ள ஜெம்புகேச்வரக்ஷேத்திரத்தில் பூர்வம் ஸ்ரீ ஆதிசங்கரபகவத்பாதாளால் ஸ்ரீ அகிலாண்டேச்வரி அம்பாளுக்கு பிரதிஷ்டை செய்விக்கப்பட்ட, ஸ்ரீசக்கிரதாடங்கங்களை ஜீர்ணோத்தாரணப் பிரதிஷ்டை செய்து பிரகிருதம் கன்னியாகுமாரீ பரியந்தமான அனேக தீர்த்த க்ஷேத்ராடனங்களைச் செய்துகொண்டு ஸ்ரீ ஆதிசங்கரபகவத்பாதாளால் ஸ்ரீ காஞ்சிக்ஷேத்திரத்தில் ஸ்தாபிக்கப்பட்ட ஸ்ரீகாமாக்ஷி ஆலய ஜீர்ணோத்தாரணத்தை உத்தே

சித்து ஸஞ்சாரம் செய்துவரும் கிரமத்தில் ஸ்ரீ அருணாசல (திருவண்ணாமலை) க்ஷேத்திரத்திற்கு ஒன்றரை யோஜனை (15 மைல்) தூரம் தெற்கில் ஸ்ரீபினாகினீ (பெண்ணை) மஹாநதி தீரத்தில் ஜம்பை என்கிற ஜபபுகேசுவரம், திருவரங்கம், மாத்ருபூதேசுவரம் இந்த க்ஷேத்திரங்களில் அந்தர்கதமான மணலூர்பேட்டை அக்ராஹாரத்தில் வியாஸபூஜா மஹோத்ஸவதினமாகிய நாளது சுக்லஹூ ஆஷாட சுத்தபூர்ணிமை (ஆடி மீ 6௨ (21—7—28) ஞாயிற்றுக்கிழமைமுதல் விசுவரூபயாத்திரா மஹோத்ஸவ தினமாகிய பாத்திரபத சுத்தபூர்ணிமை (புரட்டாசி-மீ 3௨ புதன்கிழமை) பரியந்தம் இரண்டுமாதகாலம் இவ்வருஷத்திய சாதுர்மாஸ்ய விரதத்தை நடத்துகிறபடியால் ஸ்ரீமடம் சிஷ்யகோடி மஹாஜனங்கள் முதலான யாவரும் வந்திருந்து சாதுர்மாஸ்யப்ரயுக்தமாய் நடக்கும் ஸ்ரீஸ்வாமிபூஜாப் பிராம்மணஸந்தர்ப்பணாதிகளையும் வித்வத் ஸபைகளையும் கிரமப்பிரகாரம் நடத்திவைத்து வியாஸாக்ஷத ப்ரஸாதம் பெற்று ஐஹிகாமுஷ்மிக பலன்களை அடைய வேண்டுமாய்க் கோரப்படுகிறது.

முகாம்: சிருவளூர், சுக்லஹூ ஆனி மீ 21௨

ஸ்ரீமடம் ஸர்வாதிகாரி,
ஸ்ரீகார்யம், K. குப்புஸ்வாமி ஐயர்.

மணலூர்பேட்டை என்னும் ஸ்தலம் திருக்கோவிலூர் ரயில்வே ஸ்டேஷனிலிருந்து மேற்கே 10 மைல் தூரத்திலிருக்கிறது.

## வித்யார்த்திகள் தேவை.

கும்பகோணம் ராஜா தர்மபாடசாலையில் மூன்று வேதங்களும், கவர்மெண்டு ஸர்குலர்படி காவ்ய, தர்க, மீமாம்ஸா வியாகரண கிளாஸ்கள் நடத்தப்பட்டு வருகின்றன. வித்தியார்த்திகளுக்கு மூன்றுவேளை ஆஹாராதி சௌகர்யங்களும் செய்யப்பட்டு வருகிறது யோக்யதையை அநுசரித்து கவர்மெண்டு ஸ்காலர்ஷிப்பும் வாங்கிக்கொடுக்கப்பட்டு வருகிறது. அபேக்ஷகர்கள் யோக்யதாபத்திரத்துடன் அடியில்கண்ட விலாசத்திற்கு அப்ளிகேஷன் போட்டால் சேர்த்துக்கொள்ளப்படும்.

விலாஸம்:— வெங்குசாமி சாஸ்திரிகள்,
ஹானரெரி மானேஜர், ராஜாபாடசாலை,
டபீர்புதுத்தெரு, கும்பகோணம்.